# தர்மமிகு சென்னையில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கு நடந்தேறிய அதிசயம்


சிவத்தமிழ் குகமணி
தெ. தனபால்
Email : thiruppalli@yahoo.com
Cell : 9444958526


முருகப் பெருமான் அடியார்களிடம் திருவிளையாடல் செய்வது அவனுடைய வழக்கமாக இருக்கிறது. பல நேரங்களில் முருகப் பெருமான் நமக்கு சோதனை செய்கிறான் என எண்ணி நம்முடைய மனக் கவலையை அவனிடம் கூறும் போது, அதனை முருகன் செவிமடுத்துக் கேட்டவுடன் அடுத்த நொடிப் பொழுதில் நமது கவலை நீங்கிவிடுகிறது. அருஉருவமாக இருக்கும் இறைவன் பக்தருக்கு அருள்புரிகிறான். திருஞான சம்பந்தர் அருளிய திருவாவடுதுறைப் பதிகத்தில் 9 ஆவது பாடலில்

“பித்தொடு மயங்கியோர் பிணி வரினும் அத்தா உன் அடி
அலால் அரற்றாது என்நாப்
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப் பத்தர்கட் கருள்
செய்து பயின்றவனே!”

என்று வருணிக்கும் விதத்தை நாம் சற்று உற்று நோக்கிப் பார்க்க வேண்டும். இந்தப் பாடலில் சிவபெருமானுக்கு என்ன வேலை என்றால் அடியார்களுக்கு அவர்களுடைய குறைகளைத் தீர்த்து அருள்வதுதான். நம்முடைய குறைகளை முருகன் தீர்த்து வைத்தவுடன் அவன் எழுந்தருளியுள்ள கோயில்களில் மிக விமரிசையாக பூசைகளைச் செய்து கொண்டாடி வருகிறோம். இதுபோல ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கையிலும் ஒரு மிகப் பெரும் அதிசயம் நடந்தேறியது. அதுவும் தர்மமிகு சென்னையில் நடந்தது என்றால் இது ஓர் உலகமகா அதிசயம் ஆகும். அந்த மிகப் புனித நாளை சுவாமிகள் “மயூரவாகன சேவன விழா” என்று கொண்டாடினார். அந்தத் திருவிழா தர்மமிகு சென்னையில், சுவாமிகள் குகசாயுச்சிய நிலையில் ஜீவ சமாதி கொண்டுள்ள இடமான **திருவான்மியூரில் வருகின்ற 12.1.2013 அன்று நாள் முழுவதும் மகாதேஜோ மண்டலத்தார் கொண்டாட உள்ளனர்.** இதைப் படிக்கும் மெய்யடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு சுவாமிகளுடைய அருளைப் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்பது தான் என்னுடைய அவா.


அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த ஞானபாநு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருவிராமேச்சுரத்தில் பாம்பன் பதியில் கி.பி.1850-52 ஆண்டிற்குள் அவதரித்தவர்கள். மிக இளமைப் பருவந்தொட்டே அறுமுகனை மட்டுமே தொழுபவர்கள். அப்பெருமான் புகழை 6666 திருப்பாக்களால் பாடிப் பரவியவர்கள். இத்திருப்பாக்களை ஆறு மண்டலங்களாக வகுத்துள்ளார்கள். இவற்றுள் ஆறாவது மண்டலமாக விளங்குவது ஸ்ரீமத் குமார சுவாமியம் எனும் நூலாகும். இதன்கண் திருவிளையாடற் காண்டம், கேத்திரகாண்டம், கடாவிடைக்காண்டம்,



வேட்கைகாண்டம், பலதிறப் பொருட்காண்டம் எனும் ஐந்து காண்டங்கள் உள்ளன. கடாவிடைக்காண்டத்தில் ஆறு பகுதிகள் உள்ளன. முதல் ஐந்து பகுதிகளும் மொத்தம் ஐம்பது பாடல்கள் கொண்டவை. ஆறாம் பகுதியாக அமைந்துள்ளதுதான், அசோக சாலவாசம் என்பதாகும். இதன்கண் எட்டுப் பதிகங்கள் உள்ளன. இவற்றை முதற்பத்து, இரண்டாம்பத்து என்பது போன்ற பெயர்களால் குறித்துள்ளார்கள். அடியொன்றிற்குப் பதினோரெழுத்தளவும், பதினாறு எழுத்தளவும் உடைய பாடல்களும், ஒரு பாடலில் நூற்றெட்டு எழுத்தளவுடைய ஒரு பதிகமும் இருசீர் வண்ணங்களும், சந்தங்களும், சிறப்புடைய அடியெதுகைகளும் அசோக சாலவாசத்தில் அமைந்து கற்போர் உள்ளங்களைப் கழிபேருவகையில் ஆழ்த்துகின்றன. அணிநயங்களும், சொல்நயம், பொருள் நயங்களும் இன்பம் செய்கின்றன.

சுவாமிகள் வாழ்க்கையில் ஏற்பட்ட பெருந்துன்பம் கால் முரிந்ததாகும். உப்புநீக்கி உணவுண்ணும் பழக்க முடைமையாலும் முதுமையாலும் முரிந்தகால் குணமடையாது என மருத்துவர்கள் கூறிவிட்டனர். நம்பினவரைக் கைவிடாத குகேசன் மயூரவாகனக் காட்சியைக் காட்டி முரிந்தகால் பொருந்தச்






செய்தருளினான்! மருத்துவர்களும் அடியார்களும் உலகத்தாரும் வியப்படைந்தார்கள். தமக்குற்ற பெருந்துன்பத்தை யாவரும் காண முருகப் பெருமான் எளிதில் போக்கிய அருளற்புதத்தைச் சுவைபடக் கூறச் சுவாமிகள் விழைந்தார்கள் போலும்! அதனால் செவ்வேட்பரமன் மீது காதல் கொள்ளும் செல்வமும் அழகும் அறிவும் மிக்க தலைவியையும் அவளுக்கேற்ற உயிர்த்தோழியையும் படைத்துக் கால்முரிவு நிகழ்ச்சியை அகப்பொருளில் விளக்குவதும், எவ்வித இழி காமப் புனைந்துரைகள் இடம் பெறாதவாறு பாடல் புனைந்துளதும் சுவாமிகளின் தூய பத்தி நெறியைக் காட்டுவனவாம்.

முதல் மூன்று பத்துகளில் தலைவியின் அழகு, செல்வப் பெருமை, இயற்கைக் காட்சிகள், முருகப் பெருமானின் பெருமை, அடியார்க்கு அருளும் திறன் முதலியன அழகுறத் தீட்டப் பெறுகின்றன. நான்கு முதல் ஏழாம் பத்து முடிய, சுவாமிகளின் கால்முரிவு, மருத்துவமனையில் தங்கியிருத்தல், அடியார் துயரம், மயூரக் காட்சி, அடியார் பூசனை, முதலிய செய்திகள் விளக்கப்படுகின்றன. இறுதியாக உள்ள எட்டாம் பத்தில் தலைவி தன்னை மறந்து தலைவன் நாமத்தையே கூறி அவனையே அடையத் தலைப்பட்டாள். இளவேனிற் பருவத்தில் இன்பமாகப் பொழுதைக் கழிக்க விரும்பி அசோகஞ்சோலைக்குச் சென்ற தலைவி முருகன் பெருமைகளையே வினவி அறிந்த வண்ணம் இருந்தாள். அடியார்க்கு எவ்வளவு பெருந்துன்பம் வரினும் நொடியில் போக்குவான் என்பதையும் முரிந்த கால் பொருந்தச் செய்தருளியமையால் உணர்ந்துகொண்டாள். ஆதலால் உலக இன்பங்களைத் துறந்தாள். துவராடை உடுத்தாள், உருத்திராக்கம் அணிந்தாள், திருநீறு பூசினாள், சடைமுடி தரித்தாள். தன் நகரத்தையும் மறந்தாள். தற்போதம் இழந்து பரபோதத்தில் திளைத்தாள். மண்ணுலகில் பிறந்த பயனை அடைந்துவிட்டாள்.




அசோகம் என்பது மரத்தில் ஒருவகை. சாலம் என்பதற்கு மரம் என்று பொருள். வாசம் என்பதற்குத் தங்குதல் எனப் பொருள். அசோகமரங்கள் அடர்ந்த சோலையில் தங்குதல் என்பதை உணர்த்தும் சொற்றொடரே அசோக சாலவாசமாகும். இத்தொடருக்கு இன்னொரு பொருளும் உண்டு. அதாவது, சோகம் என்பது துன்பம். அசோகம் என்பது துன்பம் இல்லாமை. சாலஎன்பது மிகுதியைக் காட்டும் உரிச்சொல். வாசமாவது தங்குதல். உலகில் மக்கள் பல்வேறு துன்பங்களில் மூழ்கித் துடிக்கின்றனர். இன்பம் போல் தோன்றுவன முடிவில் துன்பமாகின்றன. ஆதலால் உயிர்கள் எதனாலும் இன்பம் அடைய முடியாது. துன்பம் இல்லாத இடம் இறைவனின் இணையடிகளே. அழியாத இன்பத்தில் ஆழ்த்துவன அத்திருவடிகளே. ஆதலால் அசோகமாக விளங்கும் அத்திருவடிகளில் கலந்து நன்கு வாழ்தலே பேரின்பப் பெருவாழ்வாகும். முதலில் உலக இன்பத்தை விரும்பிய தலைவியும் படிப்படியாக இறைஞானம் எய்தி முருகன் திருவடி எனும் அசோகமான பெயரிட்டுள்ளார்கள். இந்நூலின் பெருமையை உணர்ந்து கற்பவர் பிறவிப் பயனை எய்துவர். மயூரவாகன சேவன விழாவன்று இந்நூல் முழுவதையும் ஓதவேண்டும் என்பது சுவாமிகளின் கட்டளை.






## மயூரவாகன சேவன விழா

"மார்கழி மாதத்துப் பூருவப்பக்கப் பிரதமை தோறும் ஏற்படக்கூடிய இச்சேவனத்தில் விமானத்தின் மிசை விக்கிரகம் இருத்தி வெளியே தூக்கிச் செல்லல் இல்லை. செய்யொணாது என்பதே எனது துணிபாம். எழிலுடைய இரண்டு கோழிக்கொடிகளுக்கும் வேல்களுக்கும் வச்சிராயுதத்துக்கும் புட்பமாலைகள் சார்த்தப்பட்டுச் சந்தன தூபதீப உபசாரங்களோடும் நல்ல வாத்திய தோத்திரங்களோடும் இனிது அலங்கரிக்கப்பட்ட வீதியில் அவை உலாவி இருப்பிடம் அடையத்தக்கன. சிறந்த ஆயுதம் குடை முதலியன கூடச் செல்லலாம். மற்றும் சிறப்புகள் பல புரியலாம். இருப்பிடத்தே மயூரவாகனப் பரமன் படத்தைப் பூந்தொடையல்களால் அலங்கரித்து விடியும் காறும் சண்முகசகச்சிர நாமார்ச்சனை புரிதலும் **அசோகசாலவாசமும் படித்தல் வேண்டும். அருட் பெருங்கடலின் மகிமைகளைக் குறிப்பாக எடுத்து விளம்பும் இது படியாமே இத்திருவிழா நடை பெறுவதில்லையாம்.** அடுத்ததினம் அடியவர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமும் பயசுகலந்த மதுரபானமும் குறைவிலாது நல்கி உபசரித்தல் புரியத்தக்கது. பணவருவாய் அதிகம் ஏற்படின் பகர்ந்து போந்த பரமகாரியங்கள் ஏற்புடைமையில் பல தினங்கள் புரிதலும் ஏற்புடைத்தே. ஞான பூஜையை அனுசரித்து நடப்பதே இப்பரம காரியங்கள் என எண்ணுக."

**- இது சுவாமிகளின் வாக்காகும்.**

இந்த நிகழ்ச்சியின் தொகுப்பை அடியேன் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சியில் 42ஆம் பாடல் முதல் 46ஆம் பாடல் வரை விளக்கியுள்ளேன். இதற்காக வரையப் பட்ட ஓவியம், படங்கள் ஆகியவற்றை நம் இணைய தளத்தில் பார்க்கலாம். அது மட்டும் அல்லாமல் சென்ற வருடம் நடந்த மயூரவாகன சேவன விழாவின் புகைப்படங்களையும் அடியேன் இந்த இணைய தளத்தில் வெளியிடுவதற்கு சுவாமிகள் எனக்கு அருள் புரிந்து உள்ளார்கள் என்று நினைக்கும் போது இந்தப் பிறவியின் பயனை அடியேன் பெற்றதாகக் கருதுகிறேன். சுவாமிகளின் வாழ்க்கையில் பல்வேறு அதிசயங்கள் நடந்துள்ளன. அவற்றை பின் வரும் மாத இதழ்களில் நாம் நிச்சயம் தெரிந்து கொள்ளலாம்.



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**